DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மாரியப்பன் | Father/Husband Name : கருப்பசாமி |
| Age : 30 | Village : சாத்தூர் கீழக்காந்தி நகர் |
| Taluk : | Calling : கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Nov 5, 2025

(Accused Present)

**முதல் விசாரணை :-**

1. நான் சாத்தூர் கீழக்காந்தி குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன்.

2. கடந்த 26.10.2019 ம் தேதி இரவு 10.00 மணியளவில் நானும், வெங்கடேசன் என்பவரும் சாத்தூர் பைபாஸ் ரோட்டில் உள்ள SSS காம்ப்ளக்ஸின் எதிர்புறம் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து அந்த விவரத்தை ஒரு பேப்பரில் எழுதினார்கள். அந்த ஆவணத்தில் நானும், வெங்கடேசும் சாட்சிக்காக கையொப்பம் செய்தோம். போலீசார் அந்த இடத்தில் தயார் செய்த ஆவணம் இது தான். பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

3. நான் கையெழுத்து போட்டுக் கொடுத்த தாளில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டபடி கையெழுத்து போட்டு கொடுத்தேன் என்றால் நான்கு வழிச்சாலை அருகே வைத்து போட்டு கொடுத்தேன். நான்கு வழி சாலை அருகே வைத்து கையொப்பம் போட்டுக் கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தான் அந்த கையெழுத்தை போட்டுக் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate 2, Sattur